**22.10.2025**

அ.வ.எண். **113/2017**

<u>வா.சா.**2** ஏழுமலை குறுக்கு விசாரணை</u>

**1**. வாதி அழைத்ததன் பேரில்தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். தாவாசொத்துகள் **50** வருடத்திற்கு முன்பு சண்முகம் மற்றும் அவரது சகோதரர்களால் வாய்மொழி பாகபிரிவினை நடந்தது என்று எனது பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ளேன் அந்த விவரம் எப்படி தெரியும் என்றால் சண்முகம் சொல்லிதான் தெரியும். சண்முகம் எந்த தருணத்திலும் வாய் மொழி பாகபிரிவினை பற்றி கூறவில்லை. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சண்முகத்தின் உடன்பிறந்தவர்களை பற்றி தெரியுமா என்றால் தெரியாது ஆதலால் அவர்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பாகபிரிவினை பற்றி தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**2**. வாதி கிருஷ்ணன் எத்தனை வருட பழக்கம் என்றால் அவர் சிறுவயதாக இருக்கும்போது தெரியும். வாதி எனக்கு உறவினர் கிடையாது. சண்முகத்தின் வாரிசுகள் யார் என்றால் **2** மகள் மற்றும் **3** மகன்கள் உள்ளனர் அவர்கள் பெயர் தெரியாது. வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவாசொத்தை அவர் அனுபவித்து வருகிறார் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். சண்முகம் யாருக்கு பொது அதிகாரம் எழுதிக் கொடுத்தார் என்றால் கிருஷ்ணன், ரமேஷ் மற்றும் வசந்தி எழுதி கொடுத்துள்ளார். இந்த வழக்கின் பிரதிவாதி சுந்தரமூர்த்தியை தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் அனுபவத்தை

தடை செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது ஆனால் வாதிதான் பயிர் வைத்து வருகிறார். இவ்வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கை பற்றி எந்த விவரமும் தெரியாமல் வாதிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.